## சிறுவர் பாதுகாப்பு - தேசிய நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - 2020

### 1. நிதிக்கூற்றுக்கள்

#### 1.1 அபிப்பிராயம்

சிறுவர் பாதுகாப்பு - தேசிய நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

#### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

#### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிதியத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மற்றும் வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2019 மார்ச் 20 ஆந் திகதிய அமப/19/0838/101/ 059 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம். | (i) அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் 3.1(ii) மற்றும் (iii) ஆம் பந்திகளின் பிரகாரம் மீளாய்வாண்டில் ‘‘கெப்பகரு மாபிய – தூதரு’’ செயற்திட்டத்தின் கீழ் பதிவு செய்து உதவிகளை வழங்கிய நன்கொடையாளரிடமிருந்து மற்றும் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நிதியத்திற்காக நன்கொடை / உதவிகளைப் பெறுவதற்கு நிதியம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் | இந் நிதியம் நிறுவப்பட்டு மிகவும் குறுகிய காலத்திற்குள் அமைச்சு மற்றும் திணைக்களத்திற்கு உரிய விடயப்பரப்பினை திருத்தியமைத்து 2019 திசெம்பர் 10 ஆந் திகதி வெளியிடப்பட்டிருந்த 2153/12 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் சனாதிபதிச் செயலகத்தின் கீழ் காணப்படுகின்ற சிறுவர் பாதுகாப்பு தேசிய நம்பிக்கைப் பொறுப்பு நிதியம், மகளிர் மற்றும் சிறுவர் நடவடிக்கைகள் மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சின் கீழ் இணைக்கப்பட்டமை யால் திட்டமிடப்பட்ட முறையில் நிதியத்தின் நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அமைச்சரவை தீர்மானத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (ii) | அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் 3.4 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியத்தின் பொறுப்பாளரினால் நிதியத்தின் முகாமைத்துவம் மற்றும் உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கான முறைமை, ஏற்பாடுகள் மற்றும் நடைமுறைகள் 2020 திசெம்பர் 31 வரை தயாரிக்கப்பட்டிருக் கவில்லை. | -மேற்படி- | அமைச்சரவை தீர்மானத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படல் வேண்டும். |
| (iii) | அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் 3.5 ஆம் பந்தியின் பிரகாரம் 2020 ஆம் வருடத்திற்கான நிதியத்தின் செயலாற்றல் தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டு, அவ்வறிக்கை அமைச்சரவையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்க வில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (iv) | அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் 3.6 ஆம் பந்தியின் பிரகாரம் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் முகாமைத்துவத்திற்காக தேவைப்படும் பதவியணி அதன் பொறுப்பாளரினால் தீர்மானிக்கப்பட்டு ஆட்சேர்க்கப்படுதல் மற்றும் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு பதவியணி ஆட்சேர்ப்பதற்காக பொறுப்பாளரினால் நடவடிக்கைகள் | -மேற்படி- | அமைச்சரவை தீர்மானத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஆ) | 2019 ஒக்தோபர் 16 ஆந் திகதி அமப/19/2849/101/059-I ஆம் இலக்க அமைச்சரவை அங்கீகாரம் | (i) | அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம், ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் சிறப்புத் திறன்களைக் கொண்ட குழந்தைகளின் நலன் மற்றும் எதிர்காலப் பாதுகாப்பிற்காக உதவி கோரி தொடர்ந்து கோரிக்கைகள் வருவதால், இந்த நிதியம் முறையாக உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். எனவே, நன்கொடையாளர்களிடம் இருந்து பெறப்படும் உதவித் தொகை மட்டும் போதாததால், தேசிய லொத்தர் சபையினால் நடத்தப்படும் வாராந்திர லொத்தர் சீட்டொன்று கொள்வனவு செய்யப்பட்டு, அதன் மூலம் கிடைக்கும் மிகை ”சிறுவர் பாதுகாப்பு – தேசிய நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு'' செலவு வைக்கப்பட்டு, மேற்படி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை வலுப்படுத்தி, நாட்டின் குழந்தைகளின் நலனுக்காக பயன்படுத்த முன்மொழியப்பட்டது. அதன்படி, 2020 சனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரை, தேசிய லொத்தர் சபையிடமிருந்து ரூபா 9,307,308 தொகை நிதியத்திற்கு கிடைத்திருந்தது. எவ்வாறான போதிலும், அந்த நிதி அதன் நோக்கங்களை நிறைவேற்ற நிதியத்தினால் பயன்படுத்தப்படவில்லை. | -மேற்படி- | அமைச்சரவை தீர்மானத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படல் வேண்டும். |
| | | (ii) | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், லொத்தர் விற்பனையின் மூலம் நிதியத்திற்கு | -மேற்படி- | அமைச்சரவை தீர்மானத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் |

| | | |
|---|---|---|
| | மேற்கொள்ளப்படும் அனுப்பல்களை அரச வங்கிகளில் நிலையான வைப்புகளில் முதலீடு செய்து அதன் மூலம் கிடைக்கும் வட்டி வருமானத்தை பயன்படுத்தி சிறுவர் பாதுகாப்பு – தேசிய நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நோக்கங்களுக்காக ஈடுபடுத்த வேண்டியிருந்த போதிலும், 2020 ஆம் ஆண்டினுள் கிடைத்திருந்த ரூபா 9,307,308 ஆன வருமானம் அந்த பணிக்காக நிலையான வைப்புகளில் முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | செயற்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 10,773,628 ஆன மிகையொன்றாக காணப்பட்டதுடன், அதனோடு ஒத்த கடந்த வருடத்தின் மிகை ரூபா 17,724,917 ஆகும். நிதி விளைவுகளில் ரூபா 6,951,289 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு மீளாய்வாண்டுக்காக நன்கொடைகள் கிடைக்காமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ‘‘சிறுவர் பாதுகாப்பு தேசிய நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்’’ மூலம் பின்வரும் நோக்கங்கள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன.<br>i. பல்வேறு ஆதாரங்களிலிருந்து அடையாளம் காணப்பட்ட தீவிர வறுமைக் குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளை ஆதரித்தல்.<br>ii. பெற்றோரின் கவனிப்பு மற்றும் பாதுகாப்பை இழந்த குழந்தைகளின் முன்னேற்றத்திற்காக உதவுதல். | மேற்குறிப்பிடப்பட்டவாறு நிதியம் பெண்கள் மற்றும் சிறுவர் நடவடிக்கைகள் மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சின் கீழ் இணைக்கப்பட்டிருந்தமையால் செயற்படாத நிலையில் காணப்பட்டதால் நிதி நிதியத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காகப் பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பமொன்று கிடைக்கவில்லை என்பதால் நிலையான வைப்புகளில் | நிதியத்தின் நிதி அதிகபட்சமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | iii. இரட்டை குழந்தைகள் அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகளை ஒரே நேரத்தில் பராமரிப்பதால் ஏற்படுகின்ற நிதிச் சிக்கலுக்கு உதவுதல்.<br><br>iv. பெற்றோரால் கைவிடப்பட்டதால் ஆதரவற்ற குழந்தைகளின் நலனுக்காக உதவுதல்.<br><br>v. பிறப்பு அல்லது பிற காரணங்களால் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் முன்னேற்றத்திற்கான ஆதரவை வழங்குதல்.<br><br>vi. பல்வேறு சிறப்புத் தன்மைகளைக் கொண்ட குழந்தைகளுக்கு உதவுதல் ஆனால் வறுமையின் காரணமாக அத்திறமைகளை முன்னேற்றுவதற்கோ அல்லது மேம்படுத்துவதற்கு சிரமத்திற்குள்ளாகின்ற குழந்தைகளுக்கு உதவுதல்.<br><br>vii. புதிய கண்டுபிடிப்புக்கள், பரிசோதனைகள், அராய்ச்சிகள் மற்றும் புதிய கண்டுபிடிப்புக்கள் மேற்கொள்கின்ற மற்றும் அசாதாரண விளையாட்டுத் திறன்களுடன் மற்றும் அசாதாரண கல்வித் திறமைகளைக் கொண்ட குழந்தைகளுக்கு உதவுதல்.<br><br>viii. நன்கொடையாளர்களுக்கான ‘‘கெப்பகரு மாபிய – தூதரு’’ நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்தல்.<br><br>எனினும் 2020 திசெம்பர் 31 இல் மொத்தம் ரூபா 28,498,545 ஆன நிதியத்தின் மீதி, மேற்படி நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படாது, வங்கி நடைமுறைக் கணக்கில் ரூபா 10,329,475 ஆனது நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன். நிலையான வைப்புக்களில் ரூபா 18,169,070 ஆன முதலீடு செய்யப்பட்டிருந்தது. | காணப்பட்ட ணத்தை மீள பெற்றுக்கொள்ளும் தேவைப்பாடு ஏற்படவில்லை. | |
| (ஆ) | 2020 யூலை 16 ஆந் திகதிய அமப/20/1009/212/017 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் 2020 யூலை மாதம் முதல் 2020 | நிதி அமைச்சினால் உறுதிப்படுத்தியுள்ளவாறு இந்த பணம் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளதுடன், | அமைச்சரவையின் தீர்மானத்தின் ஏற்பாடுகளிக் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நவம்பர் மாதம் வரையிலும் லொத்தர் விற்பனையிலிருந்து கிடைத்த ரூபா 9,348,408 தொகை திரண்ட நிதியத்திற்கு அனுப்பட்டிருந்ததுடன், அந்த பணம் மேற்படி (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதியத்தின் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குக்கு அனுப்பப்படவில்லை. | |
| (இ) | 2019 ஆம் ஆண்டினுள் நிதியத்திலிருந்து கிடைத்திருந்த ரூபா 17,522,167 ஆன வெகுமதித் தொகையில் ரூபா 16,500,000 ஆன நிலையான வைப்பு ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அந்த நிலையான வைப்புகளில் 2020 ஆம் ஆண்டுக்கு மாத்திரம் உரியதாக ரூபா 1,466,320 ஆன முதலீட்டு வட்டி வருமானமொன்று நிதியத்திற்கு கிடைத்திருந்த போதிலும், அந்த பணம் நிதியத்தின் நோக்கங்களை அடைந்துகொள்ள பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மேற்படி 3.1 இன் பிரகாரம், நிதியம் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சின் கீழ் நியமிக்கப்பட்டிருந்தமையால் நிதிச் சொத்துக்கள் நிதியத்தின் நோக்கங்களை அடைந்துகொள்ள பயன்படுத்த சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. | நிதியத்தின் நோக்கம் அடையப்படும் வகையில் செயற்பட வேண்டியமை. |
| (ஈ) | 2020 யூலை 08 ஆந் திகதி அமப/20/1009/212/017 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் சிறுவர் பாதுகாப்பு – தேசிய நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மூடப்பட்டு, அந்த நிதியத்தில் காணப்படும் மீதி சனாதிபதி நிதியத்திற்கு துரித நடவடிக்கை எடுக்குமாறு மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு விதிக்கப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும், குறித்த அமைச்சின் செயலாளரினால் அந்த பணி மேற்கொள்ளப்பட்டிராததுடன், 20 மாதங்கள் தாமதித்து 2022 மார்ச் 14 ஆந் திகதி சனாதிபதி அலுவலகம் மூடப்பட்டு அதன் மீதி சனாதிபதி நிதியத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. | நிதியத்தின் இறுதி மீதி சனாதிபதி நிதியத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். |